பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 15 | புதன்கிழமை | 01.11.2023 | அதிர்வு 92

## எரிபொருள் விலையில் நள்ளிரவு முதல் திருத்தம்

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 09

# தேர்தல் வாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும் ரணில்



## சம்பந்தன் சுட்டிக்காட்டு

~ சீ.ஏ.தமிழ்மாறன் ~

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இதுவரை நிறைவேற்றவில்லை. தேர்தல்கள் தொடர்பில் அவர் அண்மையில் வழங்கிய வாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும்.” 06

## இஸ்ரேலில் மாயமான இலங்கையர் பணயக் கைதியாகத் தடுத்துவைப்பு?



இஸ்ரேல் – ஹமாஸ் மோதலால் காணாமல்போனார் எனக் கூறப்பட்ட இலங்கையரான சுஜித் பண்டார யட்டவர, ஹமாஸ் அமைப்பினரால் பணயக் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் 06

## தேர்தலைப் பிற்போட இடமளிக்கமாட்டோம்

### பஸில் திட்டவட்டம்



- சுடர் திலீபன் -

“உரிய காலத்தில் தேசிய தேர்தல்கள் நடைபெற வேண்டும். இனிமேல் 06

## ரவி செனவிரத்னவுக்குப் பிணை



மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கல்கிசை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 09




இன்று எனது பத்தியில் புதிய விடயங்கள் இல்லை. கடந்த தினங்களில் தெரிவித்தவற்றின் ‘ஃபாலோ அப்’ மட்டும்தான். ஆனாலும், அவையும் முக்கியமானவைதான்.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கை வருகின்றமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்தும் ‘மலையகம் – 200’ நிகழ்வுகளில் நாளை பங்குபற்றும் அவர் நாளை மறுதினம் 06



# தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு தரப்பட வேண்டும்

## இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை



2024ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவில்லையெனில் அரச ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இணையாக பெருந்தோட்ட தொழிலாளர்களும் போராட்டக் களத்தில் இறங்குவார்கள் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

"நாட்டின் பொருளாதார நெருக்கடியால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசிய பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் எனப் பல்வேறு கட்டணங்களும் உயர்ந்துள்ளன.

மேலும் புதிது புதிதாக வரிகள் அறவிடப்படுகின்றன. எரிபொருள், எரிவாயுவின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் ஹோட்டல் உணவுகள் மற்றும் பேக்கரி உணவுகளின் விலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அனைத்து அத்தியாவசிய பொருகளின் விலைகளும் அதிகரித்துள்ள நிலையில், தொழிலாளர்களின் சம்பளம் மாத்திரம் அதிகரிக்கப்படாமல் உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பள அதிகரிப்பு அறிவிப்பு விடுக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகிறது. அதன் பின்னர் எவ்வித சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும் தனியார் துறை ஊழியர்கள் சம்பள உயர்வுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம்.

இதேபோல் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வரவு - செலவு திட்டத்தின் ஊடாக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் இது குறித்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையெனில் அரச ஊழியர்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டம் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இணையாக பெருந்தோட்ட தொழிலாளர்களையும் போராட்டக் களத்தில் இறக்க நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறோம்" - என்று உள்ளது.

# அரச ஊழியருக்குப் பொய் வாக்குறுதி அளிக்காமல் அவர்களது சம்பளத்தை அதிகரிக்கக் கோரிக்கை!

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் வற்புறுத்து

அரச ஊழியர்களின் கோரிக்கை நியாயமானது. பொய் வாக்குறுதிகளை அளிக்காமல் அவர்களது சம்பளத்தை அதிகரிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

14 இலட்சத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் சம்பள உயர்விற்காக வீதியில் இறங்கியுள்ளனர். அவர்களின் கோரிக்கை நியாயமானது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அரச ஊழியர்களின் சம்பளம் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியிலேயே இறுதியாக அரச ஊழியர்களின் சம்பளம் 107 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது.

அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால், மறுபுறம் சம்பளம் அதிகரிக்கப்படாது என அரசாங்கத்தின் பொருளாதார நிபுணர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

இந்நிலையில் , தற்போதைய சூழலில் வாழ்க்கை செலவீனங்கள் வரம்பின்றி அதிகரித்துள்ளன. அரச ஊழியர்களின் சம்பளம் உயர்வு எத்தனை வீதத்தால் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகின்றேன்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்பியுள்ளார் என ஜனாதிபதி தெரிவிக்கிறார். அவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்பியிருந்தால் அரச ஊழியர்களின் சம்பளத்தையும் அதிகரித்திருக்க



வேண்டும்.

நாட்டின் பணவீக்கம் வீழ்ச்சி கண்டுள்ளது என அரச தரப்பு தெரிவிக்கின்றது. ஆனால், சந்தையில் பொருளாளர்களின் விலையில் மாற்றமில்லை.

பொருளாதார அழுத்தத்தம் காரணமாகவே அரச ஊழியர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். இவர்கள் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொள்ள வேண்டாம் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்." - என்றார்.

# மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக இன்று கொழும்பு நோக்கிப் பேரணி!

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக இன்று திவுலப்பிட்டியவிலிருந்து கொழும்பிற்கு பேரணி இடம்பெறவுள்ளது.

பல்வேறு மின்சார சேவை தொழிற்சங்கங்கள் மின்சார சபையின் வருடப் பூர்த்திக்கு இணையாக ஆர்ப்பாட்ட பேரணியொன்றை இன்று முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளன.

திவுலப்பிட்டியவிலிருந்து கொழும்பிற்கு இந்தப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திவுலப்பிட்டியவில் இருந்து மின்சக்தி அமைச்சு வரை முன்னெடுக்கப்படவுள்ள எதிர்ப்பு பேரணியை தடுப்பதற்கு பொலிஸார் முயற்சிக்கின்றனர் என தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இன்றைய எதிர்ப்பு பேரணி தொடர்பில் மின்சாரத்தை பயன்படுத்தும் சங்கத்தினர் பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். திவுலப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

எதிர்ப்புப் பேரணி தொடர்பில் திவுலப்பிட்டிய நகரில் துண்டுப்பிரசுரங்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™
GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

**Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living**

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்



# சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களுடன் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்







சர்வதேச அபிவிருத்திப் பங்காளர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான வட்டமேசை கலந்துரையாடல் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

2022 டிசம்பர் மாதம் நடைபெற்ற விவாதத்தின் மற்றொரு பகுதியாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

சர்வதேச அபிவிருத்தி பங்காளர்களுடன் நடைபெற்ற இந்த வட்டமேசை கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், பலதரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனங்கள், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமெரிக்க நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன இந்த கலந்துரையாடலில் பங்கேற்றன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுதல் மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி நகரும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் அபிவிருத்திக்கான சவால்கள், வாய்ப்புகள், அர்ப்பணிப்புகள் தொடர்பிலும் நேற்றுக் கலந்துரையாடப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தல் வரையே ரணிலுக்கு ஆதரவு; தேர்தலில் மொட்டு தனித்துக் களம் இறங்கும்!

## அக்கட்சியின் எம்.பியான எஸ்.எம்.சந்திரசேன தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவோம். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரைக் களமிறக்கித் தனித்துப் போட்டியிடுவோம் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பொலன்னறுவை பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

ஒருசில விடயங்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதிக்கும், எமக்கும் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த நிலைமை அரசாங்கத்துக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம்.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அரசாங்கத்துக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே நாங்கள் களமிறக்குவோம்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு இதுவரை தீர்மானிக்கவில்லை. இரு வேறுபட்ட அரசியல் கொள்கைகளைக் கொண்டுள்ள அரசியல் தரப்பினர் ஒன்றிணையும் போது முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும் என பெரும்பாலான தரப்பினர் வலியுறுத்தியுள்ளார்கள்.



பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களால் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. தேசிய உற்பத்திகளை மேம்படுத்தவும், தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளோம். என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விசேட விமானத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வருகின்றார்.நல்லூர்கோவிலில் வழிபாடு, யாழ் மத்திய கல்லூரிக்குப் பின்புறத்தில் எல்.ஐ.சி. கட்டடத்தில் ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியாவின் கிளை ஒன்றைத் திறந்து வைத்தல், இந்திய உதவி திட்டத்தில் அமைக்கப்பட்ட யாழ் கலாச்சார மையத்தைப் பார்வையிடல், யாழ் பொதுசன நூலகத்திற்கு விஜயம் செய்தல் ஆகியவை அவரது யாழ் நிகழ்ச்சி நிரலில் அடக்கம். அவர் திருகோணமலைக்கும் செல்வார் என்று கூறப்பட்டது.

பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் அண்ணாமலையும் வருவார் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அவரின் இலங்கை வருகை இம்முறை ரத்தாகி விட்டதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இ.தொ.காவின் நிகழ்ச்சியில் பங்கு பற்ற இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் மூத்த தலைவர்களில் ஒருவரான சசி தரூர் வருகின்றார்.

\+ + +

கொழும்பு தொலைக்காட்சி ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பியான சுமந்திரன் அங்கு கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போது, வயதாகித் தளர்ந்து விட்ட தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தன், அதன் காரணமாகத் தமது எம்.பி. பதவியை விட்டு விலகுவது பொருத்தமானது என்று தாம் கருதுகின்றார் எனக் குறிப்பிட்டிருந்தார். அது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருப்பது தெரிந்ததே.

இந்தப் பின்புலத்தில் ஏற்கனவே என் பத்தியில் நான் குறிப்பிட்டபடி நேற்று பகல் கொழும்பில் சம்பந்தன் – சுமந்திரன் சந்திப்பு இடம் பெற்றது. இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் குழு சம்பந்தனைச் சந்திக்கும்போது வழமைபோல அவருக்கு உதவியாக சுமந்திரன் பங்கு பற்றுவார் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். அப்படியே அந்தச் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

ஐரோப்பிய ஒன்றியக் குழு வருவதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன்னரே சம்பந்தன் வீட்டுக்கு சுமந்திரன் சென்றுவிட்டார். இருவரும் வழமை போல சரளமாக உரையாடினர். ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தீர்களா என்று சம்பந்தன் கேட்டார். மற்றைய அரசியல் விடயங்களை வழமை போல சுமந்திரனிடம் சம்பந்தன் கேட்டறிந்து கொண்டார்.

சுமந்திரனின் தொலைக்காட்சிப் பேட்டி பற்றியோ, சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் தனது கருத்தாக அந்தப் பேட்டியில் குறிப்பிட்ட விடயம் குறித்தோ சம்பந்தன் சுமந்திரனிடம் ஏதும் கேட்கவில்லை. அத்தகைய விடயம் ஒன்று தமக்கு தெரிந்ததாக சம்பந்தன் காட்டிக் கொள்ளவே இல்லை. வழமை போல அன்னியோன்யமாக உரையாடல் தொடர்ந்தது.

நாளை சம்பந்தனை தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா கொழும்பில் நேரில் சந்தித்துப் பேசுவார் என்று தகவல் வெளியாகி இருக்கின்றது. சந்திப்பின் பின்னர் என்ன செய்தி வெளியாகின்றது என்பதைப் பார்ப்போம்.

\+ + +

அரசியல் செயற்பாட்டாளர், இளம் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பங்கு பற்றும் ஒரு கருத்தரங்கு நெருக்கடியில் சிக்கி இருப்பதாக நேற்று இப்பத்தியில் கோடி காட்டி இருந்தேன். பல்கலைக்கழக மாணவர் தரப்பிலிருந்து கடுமையான எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டமையை அடுத்து கருத்தரங்க ஏற்பாட்டாளர்களே அதை நடத்தாமல் கைவிட்டனர் எனத் தெரிய வருகின்றது.

தனியார் தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பாசிச அமைப்பு என்பது தனது கருத்து என்று தெரிவித்திருந்தார் சுவஸ்திகா. அதை ஒட்டியே அவருக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. மாணவர்களின் எதிர்ப்பை அடுத்து சம்பந்தப்பட்ட துறை நிர்வாகிகள் அந்தக் கருத்தரங்க நிகழ்வை ரத்துச் செய்தனர்.

கருத்தை, கருத்து மோதலால் வெற்றி கொள்ளாமல், அழுத்தத்தால் தடுப்பதன் மூலம் வெற்றி கொண்டு விட முடியாது என்பதுதான் என் கருத்து...!

## தேர்தல் வாக்குறுதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வாக்குறுதிகள் வழங்கிக் காலத்தை இழுத்தடிக்கலாம் என்று ஜனாதிபதி தப்புக்கணக்குப் போடுகின்றார். அது ஒருபோதும் கைகூடாது.

2024ஆம் ஆண்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலும் அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று அண்மையில் ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார். அத்துடன் 2025ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார். தேர்தல்கள் தொடர்பில் அவர் வழங்கிய இந்த வாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும்.

தற்போதையஅரசுமக்கள்ஆணையை இழந்த அரசு. அந்த அரசு தெரிவு செய்த ஜனாதிபதியும் மக்கள் ஆணையை இழந்தவராகவே கருதப்படுவார். எனவே, ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் காலம் தாழ்த்தாது விரைந்து நடத்தப்பட வேண்டும். என்னைச் சந்திக்கின்ற சர்வதேச பிரதிநிதிகளிடமும் இதனை நான் எடுத்துரைத்து வருகின்றேன்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைக் காரணம் காட்டித் தேர்தல்களைப் பிற்போட முடியாது." – என்றார்.

## தேர்தலைப் பிற்போட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எந்தத் தேர்தலையும் பிற்போட இடமளிக்கமாட்டோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதன் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் அடுத்த வருடம் நடைபெற வேண்டும்.

தேர்தலைப்பிற்போட்டுஅதில்அரசியல் நடத்த எவருக்கும் இடமளிக்கமாட்டோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தல்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றது. தேர்தல்களுக்கு அஞ்சும் கட்சி எமது கட்சி அல்ல." – என்றார்.

## இஸ்ரேலில் மாயமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சந்தேகிக்கப்படுகின்றது என்று இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் மோதலால் சுஜித் பண்டார யட்டவர, கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது பிள்ளைகளின் மரபணு மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவரை விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

வென்னப்புவவைச் சேர்ந்த சுஜித் பண்டார யட்டவர இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வரவு எட்டணா; வரி பத்தணா!

பலியிடக் கொண்டு போகும் ஆட்டைக் கூட சுத்தமாகக் குளிப்பாட்டி சந்தனம், மாலை, பட்டு எல்லாம் அணிவித்து, தாரை, தப்பட்டை அடித்து, மாப்பிள்ளையை ஊர்வலமாக அழைத்துச் செல்வது போலத்தான் கூட்டிப் போவார்கள். பாவம், இந்த ஆரவாரம் எல்லாம் தன் உயிரை எடுப்பதற்குத்தான் என்பது அந்த ஆட்டுக்குத் தெரியாது.

ஜனவரியுடன் அரசு ஊழியருக்கு சம்பளம் உயர்வு. அது தனியார் துறையினருக்கும் கிட்டும். சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அது பற்றிய அறிவிப்பு இடம்பெறும் என்றெல்லாம் செய்திகள் வெளியாகி உள்ளன. சம்பள உயர்வு பற்றிய அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வெளியிட்டிருக்கின்றார்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது நமக்குத் தெரிந்ததுதான். அடுத்த வருடம் தேர்தல் ஆண்டு என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஏற்கனவே அறிவித்துள்ள பின்புலத்தில், ஜனவரியில் சம்பள அதிகரிப்பு என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு ஆச்சரியப்படுவதற்கானதல்ல. எதிர்பார்க்கப்பட்டதே. ஆனாலும், அந்த அறிவிப்பிலும் இன்னொரு ஆழமான விடயம் புதைந்திருக்கிறது. சம்பள அதிகரிப்பு என்பது வெளியில் இனிப்புப் பூசிய கசப்பு மருந்துதான். இந்தச் சம்பள அதிகரிப்புக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் சூட்சுமம் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பலியிடக் கூட்டிப் போகும் ஆட்டுக்கு சந்தனம், மாலை, பட்டு எல்லாம் அணிவித்து ஆரவாரமாக அழைத்துச் செல்வது போன்ற எடுப்புத்தான் இந்தச் சம்பள உயர்வு அறிவிப்பு.

இந்தக் கையால் கொடுத்து, கொடுத்ததை விட அதிகமாக மறக் கையால் பிடுங்கும் திட்டத்தின் முதல் அங்கம்தான் இந்தச் சம்பள உயர்வு என்ற அறிவிப்பு. விடயமறிந்த வட்டாரங்கள் அப்படித்தான் கூறுகின்றன.

நாடு பொருளாதாரச் சிக்கலில் மூழ்கிக் கிடக்கின்றது. அந்த நெருக்கடியில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கான, சர்வதேச நாணய நிதியத்தின் கெடுபிடிப் போக்கிலான திட்டங்களின்படி அரசு மிக மோசமான பல முடிவுகளை முன்னெடுக்க வேண்டி இருப்பது தவிர்க்கப்பட முடியாத கட்டாயம். அந்தத் தீர்க்கமான முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்காமல் இந்த அரசினால் தாக்குப் பிடிக்கவே முடியாது என்பதுதான் யதார்த்தம். கடுமையான தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு இணங்கித்தான் இந்த நடவடிக்கைத் திட்டங்களுக்குள் அரசு இறங்கியிருப்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஜனவரியில் சம்பள உயர்வு. ஆனால் அதே சமயம் பெறுமதி சேர் (வற்) வரியை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அரசு அதிகரிக்கும் என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன. மக்கள் பாவனைக்கு உட்படுத்தும் ஒவ்வொரு பொருளிலும், சேவையிலும் அந்த வரி அதிகரிப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதை விட மக்களை நேரடியாகப் பாதிக்கும் மேலும் பல வரிகளும் உயரக் காத்திருக்கின்றன. சம்பள உயர்வு என்ற இறாலைப் போட்டு உயர்ந்த வரி அறவீடுகள் மூலம் சுறாப் பிடிக்கப் போகிறது அரசு.

## பணவீக்கம் சற்று உயர்வு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் தரவுகளின் பிரகாரம் ஒக்டோபர் மாதத்தில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் 1.3 சதவீதமாக இருந்த பணவீக்கம் இம்மாதம் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உணவுப் பணவீக்கம் மாறாமல் தொடர்ந்து -5.2 தவீதமாக உள்ளது.

இதற்கிடையில், உணவு அல்லாத பணவீக்கம் செப்டம்பரில் 4.7மூ ஆக இருந்ததுடன், அது ஒக்டோபரில் 4.9மூ ஆக அதிகரித்துள்ளது.

அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக கடந்த ஆண்டு இலங்கையில் பணவீக்கம் 76 வீதம்வரை உயர்வடைந்ததுடன், அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவீனங்கள் பன்மடங்கு அதிகரித்திருந்தன.

இவ்வாண்டு ஆரம்பம் முதல் பணவீக்கம் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காப்பகத்தில் இருந்த இரு சிறுவர்கள் மாயம்




மீரிகம – அம்பன்வத்த பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் காப்பகத்தில் இருந்த இரண்டு சிறுவர்கள் காணாமல்போயுள்ளனர் என சிறுவர் காப்பகத்தின் பொறுப்பதிகாரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

15 வயதுடைய இரு சிறுவர்களே எவ்வித உத்தரவும் பெறாமல் காப்பகத்தில் இருந்து வெளியேறியுள்ளனர் என அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் பாடசாலை சீருடையில் காணாமல்போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த இரண்டு சிறுவர்கள் குறித்து தகவல் கிடைத்தால் உடனடியாக 071 859 1625 அல்லது 033 227 3222 என்ற இலக்கங்களுக்கு தெரிவிக்குமாறு மீரிகம தலைமையக பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## 7 அலுவலக ரயில்கள் இரத்து

ரயில்கள் சேவைகள் பல இரத்து செய்யப்பட்டுள்ளன. நேற்று மாத்திரம் ஏழு அலுவலக ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் சாரதிகளுக்கான பற்றாக்குறையினால் அலுவலக ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

பிரதான மார்க்கம், புத்தளம் மார்க்கம் மற்றும் கரையோர மார்க்கங்களில் பயணிக்கவிருந்த ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இரவு நேர தபால் ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்."

\- சீனப் பழமொழி



# குடா கங்கையின் நீர்மட்டம் உயர்வு

குடா கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதன் காரணமாக புலத்சிங்கள, மதுராவல மற்றும் பாலிந்த நுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வெள்ள அபாயம் நிலவுகிறது என நீர்ப் பாசனத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இதனிடையே, நாட்டின் பல பகுதிக ளிலும் பிற்பகல் வேளையில் கடும் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, தெதுறு ஓயா நீர்த் தேக்கத்தின் 06 வான்கதவுகள் திறக் கப்பட்டுள்ளன.

இதன் மூலம் செக்கனுக்கு 8,400 கன அடி நீர் விடுவிக்கப்படுகின்றது.

இதனிடையே, கொஸ்கம, மிரிஸ் வத்த பிரதேசத்தில் பஸ்ஸொன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ள னர்.

கொழும்பிலிருந்து அவிசாவளை நோக்கி பயணித்த பஸ்ஸின் மீது மரம் முறிந்து வீழ்ந்துள்ளது என பொலி ஸார் தெரிவித்தனர்.

அனர்த்தத்தில் காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மரக்கறி விலைகள் உயர்வு



**(மஸ்கெலியா நிருபர்)**

கொழும்பு, நவம். 01

நாட்டின் பல பகுதிகளில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை 30 வீதம் வரை அதிகரித்துள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

தொடர்ந்து பெய்து வரும் கன மழை யால் மத்திய மலைநாட்டில் தற் போது ஒரு கிலோகிராம் போஞ்சியின் மொத்த விற்பனை விலை 400 முதல் 420 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ கிராம் கறி மிளகாய் மற்றும் மிளகாய் 500 முதல் 550 ரூபாய் வரையிலும், ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 400 முதல் 500 ரூபாய் வரையிலும் உயர்ந் துள்ளன. ஏனைய மரக்கறி வகைகளின் விலையும் அதிகளவில் உயர்ந்த நிலை யில் உள்ளன எனப் பாவனையாளர் கூறுகின்றனர்.



# காணாமல் போன நெல் தொகையின் பெறுமதி ஆறரைக் கோடி ரூபாவாம்!

## நெல் சந்தைப்படுத்தல் சபை தரப்பில் தெரிவிப்பு



குருநாகலிலுள்ள நெல் களஞ்சியசாலைகளில் இருந்து காணாமல் போயுள்ள நெல் தொகையின் பெறுமதி ஆறரைக் கோடி ரூபா என நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

நெல் தொகை காணாமல் போனமை தொடர்பான இறுதி அறிக்கை விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் நாளை கையளிக்கப்படவுள்ளது என சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட குறிப்பிட்டுள்ளார்.

நிக்கவெரட்டிய மற்றும் மஹவ நெல் களஞ்சியசாலைகளில் இருந்து 6 லட்சத்து 50 ஆயிரம் கிலோ கிராம் நெல் காணாமல் போயுள்ளது.

பொல்கஹவெல நெல் களஞ்சியசாலை நேற்றுப் பரிசோதிக்கப்பட்டது.

குருநாகலிலுள்ள களஞ்சியசாலைகளில் நெல் தொகை காணாமல் போனமை தொடர்பில் அந்தக் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட அதிகாரிகள் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் 2 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

# ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தலைவராக ஆனந்த விஜேவிக்கிரம நியமனம்



தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் புதிய தலைவராக விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிகார சபையின் பணிப்பாளர் சபை நேற்றுக் கூடிய போதே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளர் சபையை கூட்டுவதற்கு சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன நடவடிக்கை எடுத்திருந்தார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தல், தரமற்ற மருந்துகளை பயன்படுத்துதல் மற்றும் தரவுகளை அழித்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மீது அண்மைக் காலமாக முன்வைக்கப்பட்டன.

சுகாதாரத் துறையில் இவ்வாறானதொரு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் புதிய சுகாதார அமைச்சராக வைத்தியர் ரமேஷ் பத்திரனவை நியமித்தார்.

இதன்போது முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சுற்றாடல் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

### ரவி செனவிரத்னவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரவி செனவிரத்ன செலுத்திய கார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு காலி பிரதான வீதியின் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபத்துக்குள்ளாகியது

தனது காரில் கொழும்பிலிருந்து தெஹிவளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது முன்னாள் சென்று கொண்டிருந்த மற்றுமொரு காருடன் மோதியதுடன் குறித்த கார் எதிர்த் திசையில் வந்த பஸ் ஒன்றுடன் மோதி விபத்து இடம்பெற்றிருந்தது.

விபத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இருப்பினும் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் மோதப்பட்ட கார் பலத்த சேதமடைந்திருந்தது.

எவ்வாறாயினும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் ரவி செனவிரத்ன வெள்ளவத்தை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் ரவி செனவிரத்னவுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு கல்கிஸை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலதிக நீதிவான் சஞ்சய் எல்.எம். விஜேசிங்கவினால் ஒரு இலட்சம் ரூபா சரீர பிணை மற்றும் 2 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பிணையில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவுக்குப் பிணை வழங்குவதற்கான உத்தரவை இதன்போது பிறப்பித்தார்.

பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து சந்தேகநபருக்குப் பிணை வழங்கப்படுகின்றது என்று மேலதிக நீதவான் சஞ்சய் எல். எம்.விஜேசிங்க அறிவித்தார்.

### எரிபொருள் விலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

92 ரக பெற்றோலின் புதிய விலை 356 ரூபாவாக அமைந்துள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 423 ரூபாவாக அமைந்துள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

டீசல் ஒரு லீற்றரின் விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 351 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு லீற்றர் டீசலின் விலை 356 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதற்கமைய, சுப்பர் டீசலின் புதிய விலை 431 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலையும் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 242 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை 249 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடல் ரீதியாகப் பலவீனப்பட்டிருந்தாலும் சம்பந்தன் சிந்தனை, அறிவு ஆற்றல் நிறைந்தவராகவே உள்ளார்

## இப்படிக் கூறுகிறார் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம்






"உடல் ரீதியாக நீங்கள் பலவீனப் பட்டிருந்தாலும், சிந்தனை மற்றும் அறிவு பூர்வமான செயற்பாடுகளில் நீங்கள் இன்னும் ஆற்றல் நிறைந்தவராகவே இருக்கின்றீர்கள் என நாம் நம்புகின்றோம். தற்போது தங்கள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு செவி சாய்க்காது, அவற்றைத் தங்கள் கருத்திற் கொள்ளாது, தமிழ் மக்களின் விடிவிற்காக, அவர்களுடைய நீண்ட கால உரிமைப் போராட்டத்திற்கு தீர்வினைப் பெற நீங்கள் விரைந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்."

– இவ்வாறு வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரம் தாம் இரா.சம்பந்தன் எம்.பிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:–

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தர் ஐயா அவர்கட்கு,

தமிழ் மக்களின் மூத்த தலைவராகிய தங்களுக்கு உரிமையோடும் பணிவோடும் சில விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கை அரசு இந்த நாட்டை சிங்கள – பௌத்த நாடாக சித்திரித்து அதற்கான முழு வேலைத்திட்டத்தையும் சுதந்திரத்திற்கு பின் 1948ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்திக் கொண்டு வருகின்றது. தமிழ் மக்கள் தங்கள் தாயகமான வடக்கு, கிழக்கைப் பாதுகாத்து உரிமையோடு வாழ்வதற்காக கடந்த 75 வருட கால நீண்ட எமது போராட்டம் இன்னும் வெற்றிபெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் தமிழர் தம் பெரும்பான்மையை இழந்துள்ளனர். வடக்கு விரைவாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. தமிழர்களுடைய பூர்வீகமும் வரலாறும் பாடப்புத்தக ரீதியாகவும், தொல்பொருள் ரீதியிலும் தொடர்ந்து மறைக்கப்பட்டு வருகின்றன.

அரச தலைவர்கள் ஒருபுறம் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு மறுபுறம் வடக்கு, கிழக்கில் சிங்கள குடியேற்றங்கள், வனவளத்திணைக் களம், தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்திசபை போன்றவற்றினூடாக தமிழர்களுடைய பாரம்பரிய நிலங்களை சூறையாடுவதும் கோயில்களை அழித்து புத்த பெருமானை பிரதிஷ்டை செய்வதும், தமிழ் மக்களுக்கான வேலை வாய்ப்புக்களைப் புறக்கணிப்பதும் தொடர்ந்தும் அன்றாட நிகழ்வாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இப்படியாகத் தமிழ் மக்கள் பல முனைகளில் தாக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தியா உட்பட ஜனநாயக நாடுகளென தம்மை அடையாளப்படுத்தும் நாடுகள் தமிழர்களையும், தமிழர் தாயகத்தையும், அவர்களுடைய மனித உரிமைகளையும் பாதுகாக்கவும் நடக்கும் அநியாயங்களை தட்டிக் கேட்கவும் முன்வரவில்லை. இன்னும் சிறிது காலத்தில் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் தங்கள் தாயகத்தை விரைவாக இழந்து விடுவார்கள். இவை எல்லாம் தாங்கள் அறியாத விடயம் அல்ல.

உடல் ரீதியாக நீங்கள் பலவீனப்பட்டிருந்தாலும், சிந்தனை மற்றும் அறிவு பூர்வமான செயற்பாடுகளில் நீங்கள் இன்னும் ஆற்றல் நிறைந்தவராகவே இருக்கின்றீர்கள் என நாம் நம்புகின்றோம். அந்தவகையிலே இந்திய அமெரிக்கா உட்பட வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமிழர் தரப்புப் பிரச்சினைகள் தொடர்பாக தங்களைச் சந்தித்து கலந்துரையாடுகின்றார்கள்.

தற்போது தங்கள் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு செவி சாய்க்காது, அவற்றைத் தங்கள் கருத்திற் கொள்ளாது, தமிழ் மக்களின் விடிவிற்காக, அவர்களுடைய நீண்ட கால உரிமைப் போராட்டத்திற்கு தீர்வினைப் பெற நீங்கள் விரைந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். மறைந்த எமது தலைவர்களான தந்தை செல்வா, தலைவர் அமிர்தலிங்கம, தலைவர் சிவசிதம்பரம் போன்ற தலைவர்களுடன் தாங்கள் இணைந்து செயற்பட்டவர் என்ற முறையிலும், பல உலக ராஜதந்திரிகளுடன் எமது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தவர் என்ற ரீதியிலும், இன்று இருக்கக்கூடிய முதிர்ந்த அனுபவமிக்க தமிழ் இனத்தின் பிரச்சினைகளை முற்று முழுதாக அறிந்தவர் என்ற ரீதியிலும், தற்போதைய தமிழ்த் தலைவர்களுக்குள் தங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகத் தேர்வு செய்து தமிழ் மக்களை வழி நடத்துவதற்கு தமிழ்த்தரப்பால் ஜனநாயக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அங்கீகாரமும், ஆணையும் தங்களுக்கு வழங்கப்பட்டது.

அந்தப் பொறுப்பினைத் தங்கள் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரமுள்ள பூரண சுயஆட்சியைப்பெற தாங்கள் இந்தியா உட்பட உலகிலுள்ள ஜனநாயக நாடுகள் எல்லாவற்றுடனும் கலந்துரையாடி தமிழர்களுடைய தீர்வினை விரைவுபடுத்த வேண்டுமென தங்களை விநயமாகவும், தயவுடனும் கேட்டுக்கொள்கின்றேன்.

இதுவே தங்களால் தமிழ் மக்களுக்கு செய்யக்கூடிய மிகச்சிறந்த பணியாக அமையுமென நாம் கருதுகிறோம். ஆகவே தேவையற்ற விமர்சனங்களுக்கு அப்பால், தற்போதுள்ள தலைவர்களுள் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட மூத்த தலைவர் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தரும் கடமையும், பொறுப்பும் தங்களுக்கு உள்ளது என்பத்தைத் தங்கள் கவனத்திலெடுத்து செயற்படுவீர்களென எதிர்பார்க்கிறோம். தமிழ் மக்கள் என்றும் தங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள் என்பதைத் தெரியப்படுத்துகின்றேன்.

– என்று உள்ளது.

# ஓகஸ்ட் மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, நவம். 01

ஓகஸ்ட் மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதற்கான நிதி திறைசேரியிலிருந்து வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது என சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

13 லட்சத்து 65 ஆயிரம் பயனாளர்களுக்காக இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை: மத்திய இணை அமைச்சர் முரளிதரன் உறுதி

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அரசு உறுதியளித்துள்ளது என்று டி.ஆர்.பாலு எம்.பி. தெரிவித்துள்ளார்.

மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் முரளிதரனுடனான சந்திப்புக்கு பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிரதமர் மற்றும் வெளியுறவு துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியது மட்டுமில்லாமல் அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்பு ராமேஸ்வரத்தை சேர்ந்த 12 தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளியுறவு துறை அமைச்சர் ஜெயசங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில், முதல்வர் மு.க. ஸ்டாலினின் அறிவுறுத்தலின்பேரில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மீனவ சங்கத்தைச் சார்ந்த என்.ஜே. போஸ், பி. சேசுராஜா, ஆர். சகாயம் ஆகியோருடன் மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி. முரளிதரனை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



இதன்போது அவர் முதல்வர் எழுதிய கடிதத்தினை வழங்கினார். மேலும், கடந்த சில தினங்களுக்கு முன்பு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்கள் உள்பட 37 தமிழக மீனவர்களை உடனடியாக இலங்கை சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும்' என்றும் வலியுறுத்தினார்.

இதையடுத்து டி.ஆர்.பாலு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தமிழக முதல்வரின் கடிதம் மத்திய அரசுக்கு கிடைத்தது என்றும் அதில் மொத்தம் 64 மீனவர்கள், 10 படகுகளை விடுவிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மத்திய அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற கைது நடவடிக்கை இருக்க கூடாது என்று தமிழக அரசு தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட இலங்கை அரசுடன் ஒன்றிய அரசு உடனடியாக பேச்சு நடத்தி தமிழக மீனவர்களை விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக பிடிபட்ட படகுகளுடன் அதன் உரிமையாளர்களும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என இலங்கை அரசு புதிய சட்டம் கொண்டு வந்துள்ளது. அதனை ரத்து செய்ய ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

தமிழக அரசின் கோரிக்கையை துறைசார்ந்த அதிகாரிகளுடன் ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய இணை அமைச்சர் தெரிவித்தார் என்று தெரிவித்துள்ளார்.

# கர்நாடக காங்கிரஸ் தமிழகத்தை எதிரியை போன்று பார்க்கிறது!

## - அண்ணாமலை விமர்சனம்



கர்நாடகாவில் ஆட்சி செய்து வரும் காங்கிரஸ் கட்சி தமிழகத்தை எதிரி நாடு போல பார்க்கிறது. இதை அமைச்சர் துரைமுருகன் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பரமத்தி வேலூரில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை 'என் மண், என் மக்கள்' நடைப்பயணம் மேற்கொண்டார். இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

காவிரி நதிநீர் பங்கீட்டில் காங்கிரஸ/ம், தி.மு.கவும் அரசியல் நாடகம் நடத்துவதை போலத்தான், இண்டியா கூட்டணியும் உள்ளது. கர்நாடகாவில் ஆட்சி செய்து வரும் காங்கிரஸ் கட்சி தான் தமிழகத்தை எதிரி நாடு போல பார்க்கிறது என்பதை அமைச்சர் துரை முருகன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

காவிரி பிரச்சினையில் கர்நாடக அரசுக்கு பா.ஜ.க. துணையாக இருக்கிறது எனக் கூறுவதில் உண்மையில்லை. பா.ஜ.க. ஆட்சி அங்கு நடக்கும்போதே அவர்களுக்கு எதிராக என் தலைமையில் உண்ணாவிரதம் நடத்தினோம். தமிழக பா.ஜ.கவை பொறுத்தவரை தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

மேலும் கர்நாடக அரசை கண்டித்து விவசாயிகளோடு சேர்ந்து மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட உள்ளோம். காவிரி நீர் பிரச்சினையில் மத்திய அரசு நடுநிலையோடுதான் செயல்படுகிறது. இந்த பிரச்னையில் யார், யாருக்கோ கடிதம் எழுதும் முதல்வர் மௌனம் சாதிப்பது எதற்கு எனத் தெரியவில்லை. உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தும் அதை கர்நாடக அரசு நிறைவேற்றாமல் இருப்பதை, அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என கருதலாம் என்று தெரிவித்துள்ளார்.

# காசாவின் மையத்திற்குள் நுழைந்தது இஸ்ரேல் படை!



எதிர்பார்த்ததை விட வேகமாக காசா பகுதிக்குள்ளான இஸ்ரேலிய படைகளின் நகர்வுகள் இருப்பதை அங்கிருந்து வரும் காட்சிகள் வெளிப்படுத்துகின்றன.

காசா நகரிற்கு வடக்கில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கும் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கும் அதேவேளை காசா பகுதியின் பின்புறமாக இஸ்ரேலிய படைகள் வந்திருக்கும் காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காசா நகரையும் தெற்கு நாசா பகுதியையும் இடைமறித்து இஸ்ரேல் தற்போது நிலைகொண்டுள்ளார்கள்.

காசாவிற்கு இஸ்ரேலிய படைகளின் தரை வழியான முன்னேற்றங்கள் எதுவும் நடக்கவில்லையென ஹமாஸ் அறிவித்த சில மணிநேரங்களிலே காசா மீதான இஸ்ரேலிய படைகளின் தாக்குதல் ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, மூன்றே வாரங்களில், காசா பகுதியில் நடந்த போரில் உயிரிழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 4000 ஐ எட்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் உலகின் மோதல் வலையங்களில் வருடாந்தம் உயிரிழந்த சிறுவர்களின் மொத்த எண்ணிக்கையை விட அதிகம் என சிறுவர்களின் பாதுகாப்பிற்காக செயற்படும் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா மற்றும் இஸ்ரேலிய சுகாதார அமைச்சுகளின் தகவல்களுக்கு அமைய, ஒக்டோபர் 7 முதல் 3,257 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் இதில் காசாவில் குறைந்தது 3,195 சிறுவர்களும், மேற்குக் கரையில் 33 சிறுவர்களும், இஸ்ரேலில் 29 சிறுவர்களும் கொல்லப்பட்டுள்ளனர் என சேவ் தி சில்ரன் தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் உலகளவில் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளில் நடந்த ஆயுத மோதல்களில் கொல்லப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை விட காசா பகுதியில் மூன்று வாரங்களில் கொல்லப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை இந்த அதிர்ச்சிகரமான புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்தை முற்றாக நிராகரித்துள்ளது அமெரிக்கா

உலகளாவிய ரீதியில் இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை அமெரிக்கா முற்றாக நிராகரித்துள்ளது.

இதனை அமெரிக்க தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி அறிவித்துள்ளார்.

அத்துடன், மனிதாபிமான உதவிகளை காசா பகுதிக்கு முன்னெடுக்கும் போது தாக்குதலை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம் என கிர்பி தெரிவித்துள்ளார்.

காசாவின் மேற்குக்கரை பகுதியில் இஸ்ரேல் தற்போது தரைவழி தாக்குதல்களையும் ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், ஹமாஸ் படைகளை ஒடுக்காமல் போர் நிறுத்தம் என்பது இல்லை என இஸ்ரேல் தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும், போர் நிறுத்தம் என்றால் இஸ்ரேல் ஹமாஸிடம் சரணடைய வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். இந்த நிலையிலேயே அமெரிக்கா போர் நிறுத்த கோரிக்கை நிராகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் ஒருவரின் வீடு முற்றாக தகர்க்கப்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது.

ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் பெரும் பங்கு இருக்கலாம் என நம்பப்படும் ஹமாஸின் மூத்த தலைவரான அரசியல் பிரிவு துணை தலைவர் சலே அல்-அரூரியின் வீடு தகர்க்கப்பட்டிருக்கிறது.

எனினும் அவர் தனது வீட்டில் இல்லை என்றும் லெபனானில் பதுங்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

பல ஆண்டுகளாக தேடலில் இருப்பவருக்கு அமெரிக்கா 2018 இல் அவர் குறித்து தகவல் தந்தால் 5 மில்லியன் டொலர் சன்மானமாக வழங்கப்படும் என அறிவித்திருந்தது.

# துறைசார் நிபுணர்கள் வெளியேற்றம் இந்த நாட்டின் அழிவுக்கான ஆரம்பமே

## கூட்டமைப்பின் எம்.பி. சிறீதரன் சுட்டிக்காட்டு



"அரசியல், பொருளாதார ரீதியாக உறுதித்தன்மையற்றிருக்கும் இந்த நாடு, மீட்சியற்ற நிலையில் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதைத்தான், நாளாந்தம் நாட்டைவிட்டு வெளியேறும் துறைசார் நிபுணர்கள், வல்லுநர்கள் மற்றும் புத்திஜீவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு பறைசாற்றி நிற்கின்றது."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற Oyslans நிறுவனத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

oyslans நிறுவனத்தின் நிறுவுநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான தம்பிஜயா பாலகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீனத்தின் பிரதம குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆளுநரின் செயலாளர் பொன்னம்பலம் வாகீசன், யாழ். பல்கலைக்கழகத்தின் கணினித் துறைத்தலைவர் எஸ். சுதாகர், இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய உதவி இயக்குநர் கே.கந்தவேள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் யாழ்ப்பாணம் நிலைய இயக்குநர் ஏ.கே.கோகுலன், தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ஆர்.திருமுருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய சிறீதரன் எம்.பி., "ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டுள்ள போதும், இலங்கையின் வடக்கு, கிழக்கில் உலகத்தரம்வாய்ந்த மென்பொருள் உற்பத்தி மற்றும் விற்பனையில் கோலோச்சி வரும் oyslans நிறுவனம் ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு எனும் வரப்பிரசாதத்தை வழங்கி வரும் நிறுவனமாகவும் முன்னிலை வகிக்கின்றது. இத்தகைய தொழில்நுட்ப வாய்ப்புக்களை எமது பிள்ளைகள் முறையாகப் பயன்படுத்தி, தமது துறைசார் அறிவையும் வல்லமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்."

– என்றார்.















# பிரிவுபசார விழாவும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும்



வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளராகக் கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் அதிவிசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கு இடமாற்றலாகிச் செல்லும் ஆழ்வாப்பிள்ளை சிறியின் பிரிவுபசார விழாவும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவரும் கிராம உத்தியோகத்தருமான அரியகுமார் ரதீஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மருதடி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து பிரதேச செயலாளர், தவில் நாதஸ்வர வாத்தியத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன், கணக்காளர் ம.சிவகுமாரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி, நிர்வாக கிராம அலுவலர் சோ.சிவலிங்கம், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் அ.ரவிச்சந்திரன், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஏனைய பிரதேச செயலகங்களான யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பளை, மருதங்கேணி, கரவெட்டி பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் ஆழ்வாப்பிள்ளை சிறிக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழு சம்பந்தன், சுமந்திரனுடன் நேரில் பேச்சு

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டார்.

தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற தமிழ்த் தேசியப் பிரச்சினை, நில அபகரிப்புக்கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னமும் இரத்துச் செய்யப்படாமல் இருப்பது போன்ற பல விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டன.







# காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளவும் மாவீரர்கள் நினைவாகவும் பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேணிக் கார்த்திகையில் மரம் நடுவோம்

## மரநடுகை மாத அறிக்கையில் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு



இயற்கையைக் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்று வகுத்து இயல்பாகவே இயற்கையோடு இசைந்த வாழ்வியலைக் கொண்டவர்கள் தமிழ் மக்கள். நெருக்கடிகள் மிகுந்த போர்ச் சூழலிற்கூட இயற்கை எனது நண்பன் என்று சொல்லி எமது சூழலைப் பேணி பாதுகாத்த மரபினர் நாங்கள். மரங்களை ஆதித் தெய்வங்களாக வழி பட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருக்கிறோம். இந்தப் பண் பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் கடுமையான விளைவுகளில் இருந் தும் எம்மைக் காப்பாற்றும். அந்த வகையில் மாவீரர்களைப் போற்றும் இக்கார்த்திகை மாதத்தில் பண்பாட்டின் தொடர்ச்சியைப்பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற் றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங் கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் மரநடுகை மாதமாக வடக்கு மாகாண சபையால் கடைப்பிடிக்கப்பட்டு வரு கிறது. இதை முன்னிட்டு பொ. ஐங் கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

காலநிலை மாற்றம் மிக மோச மாகத் தனது தாக்குதல்களைத் தொடுக்க ஆரம்பித்திருக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்த பூகோளச் சராசரி வெப்பநிலையைக் கொண்ட மாதமாக இந்த ஆண்டின் ஜுலை மாதம் பதிவாகி யுள்ளது. காட்டுத்தீயும் வெப்ப அலை களும் முன்னெப்போதையும்விட மூர்க்கம் கொண்டு பொசுக்கி வரு கின்றன. இந்த ஆண்டில் கனடாவில் மட்டும் காட்டுத்தீ ஒன்றரை இலட்சம் சதுரக் கிலோ மீற்றர்களுக்கும் அதிக மான காட்டுப் பரப்பை சாம்பலாக்கி யிருக்கிறது. கடந்த கோடையில் ஐரோப்பிய நாடுகளில் வெப்ப அலைகள் 61,000க்கும் அதிகமான மக்களைப் பலியெடுத்திருக்கிறது. இன்னொரு புறம், இந்த ஆண்டு லிபியாவில் கடும்மழை கொட்டித்தீர்த்ததில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் பலியானமையோடு பத்தாயிரத்துக்கும் மேலானோர் காணா மல் போயுள்ளனர்.

காலநிலை மாற்றத்தின் தாக்குதல் களுக்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. பூமி சூடாகுவதால் துருவப் பகுதிகளில் பனிமலைகள் உருகி வருவதன் காரண மாக உயர்ந்து வரும் கடலால் இலங்கை யின் கரையோரப் பகுதிகள் மூழ்கடிக்கப் படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடல் மட்ட உயர்வால் யாழ் குடாநாடு ஆனை யிறவுப் பகுதியில் கடலால் துண்டிக்கப் பட்டுத் தனித் தீவாக உருவாகும் என் எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகம் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ள இந்த அனர்த்தங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவு கணக்கில்லாமல் கபளீகரம் செய்து வருவதே அடிப்படைக் காரணமாகும். நாமும் யுத்தம் தின்றது போக எஞ்சியி ருக்கும் காடுகளையும் அபிவிருத்தியின் பெயரால் அழிக்கத் தலைப்பட்டிருக் கிறோம். தமிழின் அடையாளமான பனை மரங்களைக்கூட நாம் விட்டுவைப் பதாக இல்லை.

பூமி வெப்பமடைதல் வெறுமனே காலநிலை மாற்றத்துடன் அடங்கிப் போய்விடும் ஒன்று அல்ல. இதன் எதிர்விளைவுகளாகக் கடும் வரட்சி ஏற் பட்டுக் குடிநீருக்காக நெடுந்தொலைவு அலைய வேண்டி ஏற்படும். பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகும். கால் நடை வளர்ப்பைக் கைவிடவேண்டி ஏற்படும். வளியில் மாசுகள் அதிகரித்துச் சுவாசநோய்களால் அல்லாட வேண்டி ஏற்படும். மனஅழுத்தம் உருவாகித் தற்கொலை உணர்வு தூண்டப்படும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ள னர். ஏற்கனவே போரின் கொடிய வலிகளைச் சுமந்து நிற்கும் ஈழத் தமிழினம் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் கற்பனைக்கும் எட்டாத் தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடும். - என்றும் குறிப் பிட்டுள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 01.11.2023

## மேஷம்

இன்று இனிமையான நாளாக இருக்கும். உங்கள் கடின முயற்சி மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் புத்திசாலித்தனத்துடன் ஆற்றும் பணிக்காக உங்கள்மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.உங்கள் கீழ்பணிபுரிவோர்களிடமும் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வை தவிர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.உங்கள் குழந்தையின் வளர்ச்சி பற்றிய கவலை உங்களிடம் காணப்படும்.

இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும். எதிர்பாராத வகையில் இன்று பணவரவு காணப்படும்.

தேக ஆரோக்கியம் சிறந்த நிலையில் காணப்படும்.

## ரிஷபம்

பல தடைகளுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும்.உங்கள் மனதை ஓய்வாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை அதிகரித்துக்கொண்டே போவதைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் வார்த்தைகள் உங்கள் துணையின் மனதை காயப்படுத்தும்.நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இதனைத் தவிர்க்க வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும்.அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக நீங்கள் கவலைக்குள்ளாவீர்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள்.

## மிதுனம்

பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள்.கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும்.

## கடகம்

இன்று நீங்கள்அனுசரித்துச் செல்ல வேண்டும். முக்கியமான முடிவுகள்எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் நிதநிலைமையை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.உங்கள் தகுதிக்கு மீறி செலவு செய்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

## சிம்மம்

இன்று லாபகரமான நாளாக இருக்கும்.அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள்.உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றி கவலைப்படத் தேவையில்லை.சிறப்பாக இருக்கும்.

## கன்னி

சாதகமான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் முன்னேறலாம். ஆன்மீக நோக்கத்திற்கான பயணங்கள் சாதகமான பலன்களைத்தரும்.

உங்கள் சிறந்த பணியாற்றும் முறை காரணமாக நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள்.உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.இதனால் நல்ல புரிந்துணர்வு அமையும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும்.உங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.நீங்கள் உங்கள் உடலை சீராக வைத்திருப்பீர்கள்.

## துலாம்

உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.வேலைகள்அதிகமாக இருப்பதன் காரணமாக பதட்டங்கள் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது.இன்று குழப்பமான நிலையில் இருப்பீர்கள்.நீங்கள் எடுக்கும் முடிவுகள் தவறாக இருக்கும்.

வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றது.பணிச்சுமை அதிகரித்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்குள் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடனான தொடர்புகொள்ளலில் பிரச்சினைகள் காணப்படும்.இன்றைய நாளின் வனப்பு அதனால் கெடும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரைஇன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் சேமிக்க வேண்டியது அவசியம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகளை சந்திப்பீர்கள். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.11.2023

## தனுசு

புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இன்று பயணங்கள் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் உழைப்பிற்கு பலன் கிடைக்கும்.நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் சமநிலையோடு இருங்கள்.இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் காணப்படாது.நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## கும்பம்

முறையான திட்டமிடல் மூலம் கடினமான விஷயங்களையும் எளிதில் கையாளலாம்.

நீங்கள் முறையாக பணிகளை ஆற்ற இயலாது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். இன்று உங்களால் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலாது.

ஆன்மிக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.இது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.தோள்களில் வலிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## மகரம்

உங்கள் பிரச்சினைகள் பற்றிக் கவலைப் படாமல் மகிழ்ச்சியுடன் இருங்கள்.கோவிலுக்குச் சென்று வருவது ஆறுதலைத் தரும்.

நீங்கள் செய்த பணிக்கு பாராட்டு பெறுவீர்கள்.பணிகள் ஆற்றுவதில் சில தாமதங்கள் காணப்படும்.

நீங்கள்இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள்.அதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும்.உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண்களில் தொற்று போன்ற சிறிய உபாதைகள் காணப்படும்.தகுந்த மருத்துவ சிகிச்சை உங்கள் நலனை பாதுகாக்கும்.

## மீனம்

சில தடங்கல்களுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். உங்கள் கவலைகளை மறக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் பணியில் சில அசௌகரியங்களை எதிர்கொள்வீர்கள். பணிச்சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவீர்கள்.

இன்று உங்கள் பேச்சில் கடுமை காணப்படும். இது உங்கள் நாளின் இனிமையைக் கெடுக்கும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கால்களில் வலிகள் ஏற்படலாம்.உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.








# பாகிஸ்தான் அபாரம்!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் பங்களாதேஷ் அணியை பாகிஸ்தான் அணி வீழ்த்தியது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாடியது.

அதன்படி அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தன்சித் ஹஸன் மற்றும் லிற்றன் தாஸ் ஆகியோர் களமிறங்கினர்.

ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே ஹஸன் (0) ஆட்டமிழந்து சென்றார். பின்னர் வந்த ஹுசைன் சான்டோ (4), மிஸ்பிகுர் ராகிம் (5) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால், பங்களாதேஷ் அணி, 23 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்து, மூன்று விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சாய்ந்தாலும் மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய லிற்றன் தாஸ், தனது பங்குக்கு 45 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார். இவர் ஆட்டமிழந்தபோது பங்களாதேஷ் அணி, 102 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அவருக்குப் பின்னர் வந்தவர்களில், மகமதுல்லா (56), ஷாகிப் அல் ஹசன் (43), ஹசன் மிராஜ் (25) ஆகியோர் தவிர வேறெவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தொடவில்லை.

இறுதியில் பங்களாதேஷ் அணி, 45.1 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 204 ஓட்டங்களையே சேர்த்தது.

பாகிஸ்தான் சார்பாக பந்துவீச்சில், ஷாஹ் அப்ரிடி, மொஹமட் வாசிம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ஹறிஸ் ரௌவ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்ற, எஞ்சிய விக்கெட்டுகளை அஹமட், உசாமா மிர் ஆகியோர் தலா ஒன்றுப்படி வழித்துத் துடைத்தனர்.

பின்னர் 205 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

அந்த அணியின் ஆரம்ப வீரர்களான அப்துல்லா ஷாபிக், பஹர் சமன் ஆகியோர் இணைந்து அணிக்கான ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 128 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், அப்துல்லா ஷாபிக் அரைச்சதம் கடந்து (68) ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அணித்தலைவர் பாபர் அஸாம் (9) அதிர்ச்சி கொடுத்துச் சென்றார். அவரைத் தொடர்ந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பஹர் சமன் (81) ஆட்டமிழந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி, 32.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 205 ஓட்டங்களைச் சேர்த்து, 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

மொஹமட் ரிஸ்வான் (26) மற்றும் அஹமட் (17) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்து வீச்சில், ஹர்சன் மிராஜ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் ஷாஹ் அப்ரிடி தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, புள்ளிப்பட்டியலில் 5ஆவது இடத்துக்கு முன்னேறியது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில், தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து அணிகள் மோதவுள்ளன.





பரம வைரி அணிகளான பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் அணிகளின் ஜெர்சிகளை அணிந்து ஆர்ப்பரிக்கும் ரசிகர்கள்...

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 6 | 6 | 0 | 0 | 0 | 12 | 1.405 |
| 02 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | 2.032 |
| 03 | நியூஸிலாந்து | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 1.232 |
| 04 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 0 | 0 | 8 | 0.970 |
| 05 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 0 | 0 | 6 | -0.024 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -0.718 |
| 07 | இலங்கை | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -0.275 |
| 08 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | -1.277 |
| 09 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.446 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 0 | 0 | 2 | -1.652 |

# 8ஆவது தடவையாக மெஸிக்கு உயர் விருது







உதைபந்தாட்ட உலகின் மிக உயரிய விருதாக 'பலோன் டி ஆர்' விருது விளங்குகின்றது.

1956ஆம் ஆண்டு முதல் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தால் (பிபா) சிறந்த உதைபந்தாட்ட நட்சத்திரங்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு இவ்விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்கள் பட்டியலில், ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என தலா 30 பேர் இடம்பிடித்தனர்.

இவர்களிலிருந்து, இந்த ஆண்டுக்கான ஆண்களுக்கான 'பலோன் டி ஆர்' விருதை நடப்பு உலகக் கிண்ண சம்பியனான ஆர்ஜென்ரீனாவின் லயனல் மெஸி வென்றுள்ளார்.

இவர் இந்த விருதை 8ஆவது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார்.

இந்த விருதை ஏற்கனவே, 2009, 2010, 2011, 2012, 2015, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வென்றுள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்தில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ உள்ளார். அவர் 5 தடவைகள் இந்த விருதை வென்றுள்ளார்.

பெண்களுக்கான 'பலோன் டி ஆர்' விருதை நடப்பு உலகக் கிண்ண சம்பியனான ஸ்பெயின் நட்சத்திர வீராங்கனை அடானா பொன்மதி கைப்பற்றினார்.




## 'அல் இம்ரான் சவால் கிண்ண' கிரிக்கெட்:
# சம்பியனானது கலேவெல வி.கழகம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கலேவெல அல் இம்ரான் விளையாட்டுக் கழகம் நடத்திய 'அல் இம்ரான் சவால் கிண்ண' கிரிக்கெட் தொடரில், கலேவெல விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

கலேவேல நிதிகம விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியின இறுதிப் போட்டியில் கலேவெல விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கணேவல்பொல யூத் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில், கலேவெல விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனாகியது.

சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கலேவெல விளையாட்டுக் கழகத்துக்கு சம்பியன் கிண்ணத்துடன் 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடம்பெற்ற கணேவல்பொல யூத் விளையாட்டுக்கழகத்துக்கு கிண்ணமும் 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.




## தேசிய மட்ட பாடசாலை கோலூன்றி பாய்தலில்
# மகாஜனக் கல்லூரி மாணவி சாதிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பளை மகாஜன மாணவி வர்ண விருதைத் தட்டிச் சென்றுள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த வாரம் நடைபெற்றது.

இதில், 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் மாணவியான பு.டனுசிகா 2.60 மீற்றர் தாண்டி வர்ண விருதைப் பெற்றுள்ளார்.



# வடக்கின் மழலைகள் உதைபந்தாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி வெற்றி

அமரர் ச.சந்திரகாந்தன் ஞாபகார்த்த மழலைகள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி அணி வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமியால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி, நேற்று (31) காலை எட்டு மணியளவில் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்து நடைபெற்றது.

இப்போட்டிக்கு அமரர் ச.சந்திரகாந்தனின் நண்பர்கள் நிதி அனுசரணை வழங்கினர்.

வட மாகாண மட்டத்தில் 8 வயதுக் குட்பட்டவர்களுக்கு இப்போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில், தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி, மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி , கோண்டாவில் றொனால்டோ அக்கடமி, அரியாலை – யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட அக்கடமி, மருதனார் மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிச் மற்றும் வேலணை ஐயானார் அக்கடமி ஆகிய 6 அணிகள் பங்கேற்றன.

இதன் இறுதிப் போட்டியில் மருதனார்மடம் நொதேர்ண் ஸ்போட்ஸ் கொலிச் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி அணி விளையாடியது.

இதில் மயிலங்காடு ஞானமுருகன் அக்கடமி அணி 4 : 2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, மூன்றாமிடத்துக்கான போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் கிட்ஸ் அக்கடமி அணியை எதிர்த்து கோண்டாவில் றொனால்டோ அக்கடமி அணி விளையாடியது.

இதில் கோண்டாவில் றொனால்ட்டோ அக்கடமி அணி 2 : 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினராக அமரர் சந்திரகாந்தனின் நண்பரான சட்டத்தரணி ப.ஐங்கரனும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகர் மற்றும் அமரர் சந்திரகாந்தனின் பயிற்றுவிப்பாளர் கு.பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.







